## வியாபார வங்கி உற்பத்திகள்

அமானா வங்கியின் வியாபார வங்கிசார் உற்பத்திகளானது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள், கூட்டு நிறுவனங்கள் மற்றும் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகள் நிதித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முன்மாதிரிமிக்கவையாக காணப்படுகின்றன.

## முராபாஹா நிதிச் சேவை

### சேவை விபரம்

வாடிக்கையாளரின் கோரிக்கைக்கு அமைய வங்கியினால் ஒரு மூன்றாம் தரப்பு விநியோகஸ்தரிடம் அல்லது வியாபாரியிடம் இருந்து ஒரு சொத்தை கொள்வனவு செய்து உடன் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையில் அல்லது பிற் கொடுப்பனவு அடிப்படையில் பொருளின் செலவினத்துடன் சேர்த்து ஒரு இலாபத் தொகையை பெறுவதாக இணங்கி வாடிக்கையாளருக்கு மீண்டும் அதை விற்பனை செய்வதற்கான ஒப்பந்தமே முராபஹா ஆகும்.

### உள்நாட்டு கொள்வனவு / காலாந்தர நிதி வழங்கல் / வியாபார நிதி வழங்களுக்கான முராபஹாவின் வகைகள்

1. **உள்நாட்டு முராபஹா**
   ஒரு குறுகிய காலப் பகுதிக்குள் ஒரு வாடிக்கையாளருடன் உள்நாட்டில் ஒரு முராபஹா கொடுக்கல்வாங்கலை செய்து கொள்ளவது உள்நாட்டு முராபஹா எனப்படும்.

2. **விரிவுபடுத்தப்படும் முராபஹா**
   ஒரு முராபஹா கொடுக்கல்வாங்கல் ஒரு வருடத்திற்கு மேல் நீடிக்கப்படுமானால் விரிவுபடுத்தப்பட்ட முராபஹா எனப்படும்.

3. **இறக்குமதி முராபஹா**
   இறக்குமதி சம்பந்தப்பட்ட ஏதாவது கொடுக்கல்வாங்கல்களை இறக்குமதி முராபஹா ஊடாக மேற்கொள்ளலாம்.

4. **முசவ்வமா**
   உள்நாட்டில் அல்லது சர்வதேசரீதியில் ஒரு கொடுக்கல்வாங்களின் செலவினம் அடையாளம் காணப்படாமல் விற்பனை விலை மாத்திரம் வெளிப்படுத்தப்படுமானால், முசவ்வமாவை பயன்படுத்தலாம்.

### உற்பத்தியின் சிறப்பியல்புகள்

- கீழ்வரும் விடயங்களுக்காக குறுங்கால / மத்தியகால / நீண்டகால நிதிச் சேவைக்காக முராபஹா பயன்படுத்தப்படுகின்றது:
- மூலப் பொருட்கள்
- இருப்புக் கணக்கு
- உபகரணம்
- சொத்து நிதி
- வாகன நிதி (விரிவுபடுத்தப்படும் முராபஹா)
- அல்லது கொள்வனவு செய்யப்படும் வேறு ஏதாவது சொத்து
- வாடிக்கையாளருக்கு விற்கப்படும் பொருள் கற்புலனாகும் ஒரு வடிவத்தில் இருக்க வேண்டும் அல்லது அதன் இருப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதேபோல், விற்பவர் அந்தப் பொருளுக்கு உரிமையாளராக இருக்க வேண்டும்.

- பொருளின் விலை விடயத்தில் வங்கியும், வாடிக்கையாளரும், விற்பனையாளரும் பரஸ்பரம் இணங்கிக்கொள்ள வேண்டும்.
- ஒரு பக்கத்திற்கு சார்பான வகையில் விற்பனையில் எந்தவொரு நிபந்தனையையும் முராபஹா ஒப்பந்தம் உள்ளடக்கியிருக்க முடியாது. அது சாதாரண சந்தை நடைமுறைகளுக்கு முரணானதாகும்.
- பிற் கொடுப்பனவு (பை முஜால்) முறையிலான முராபஹா விற்பனையில் கீழ்வரும் விடயங்கள் ஷரீஆவுடன் இணங்கிக் காணப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- வங்கி தனது வாடிக்கையாளருக்கு கொடுப்பனவு திகதியை குறிப்பிட வேண்டும்.
- பொருள் விநியோகிக்கப்பட்ட நேரத்திலிருந்து பொருந்திக் கொண்ட காலம் ஆரம்பமாகின்றது.
- கொடுப்பனவை ஆரம்பத்தில் அல்ல பிந்தி செலுத்துவதற்காக பொருந்திக் கொண்ட விலையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.
- மீள் கொடுப்பனவை உறுதி செய்து கொள்வதற்காக வங்கியினால் ஒரு பாதுகாப்பை கோருவதற்கு அனுமதி உண்டு.
- நெகிழ்வுத் தன்மைமிக்க மீள்கொடுப்பனவு திட்டங்கள் (குறுங்காலம் / நீண்டகாலம்)

**தேவையான ஆவணங்கள்**

- முராபஹா நிதிச் சேவைக்கான விண்ணப்பம்
- வாங்குபொருள் விபரப்பட்டில்
- பிரதான முராபஹா உடன்படிக்கை
- முகவர் உடன்படிக்கை
- முராபஹா கொடுக்கல்வாங்கல் ஆவணம் (இணங்கிக்கொண்ட ஒரு விலையில் அமானா வங்கியிடமிருந்து குறிப்பிட்ட பொருளை அல்லது சொத்தை மீள கொள்வனவு செய்வதற்கான தனது கடப்பாடு)
- வழங்கல் மற்றும் ஏற்பு கடிதம்

## திஜாரா நிதிச் சேவை

### உற்பத்தி விபரம்

முடிவுப் பெருட்களை கடன் அடிப்படையில் விற்பனை செய்யும் வாடிக்கையாளர்களுக்கான விற்பனை மற்றும் முகவர் அடிப்படையிலான நிதிச்சேவை வசதியளிப்பே திஜாரா ஆகும். இந்த வசதியளிப்பானது வாடிக்கையாளர்களுக்கு தமது முடிவுப் பொருட்களை விற்பனை செய்வதற்கும், தமது நடப்பு மூலதனத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும், ரொக்க விற்பனை பயன்களை அனுபவிப்பதற்கும் துணைபுரியும்.

இந்த எண்ணக்கருவின் கீழ், வங்கியானது வாடிக்கையாளரின் முடிவுப் பொருட்களை கொள்வனவு செய்து அதே பொருட்களை கடன் அடிப்படையில் சந்தையில் விற்பனை செய்வதற்காக அந்த வாடிககையாளரையே முகவராக நியமிக்கும்.

### அமானா வங்கியில் திஜாரா நிதிச் சேவையின் வகைகள்

1. உள்நாட்டு விற்பனைகளுக்கான திஜாரா நிதிச் சேவை
2. ஏற்றுமதிக்கான திஜாரா நிதிச் சேவை

### உற்பத்தியின் சிறப்பியல்புகள்

- முடிவுப் பொருள் ஒப்பந்தமானது ஒன்றில் கடன் அடிப்படையில் அல்லது பண அடிப்படையில் பொருட்கள் விற்பனைக்கு தயாரானவாறு அனுமதிக்கப்படுகின்றது. இந்த ஒப்பந்தம் நீண்ட காலத்திற்கு வாடிக்கையாளரின் இருப்புக் கணக்கில் பேணப்படுகின்றது.
- ஒப்பந்தத்தின் நிறைவில் திஜாரா ஒப்பந்தத்திற்கான விலை தெரியப்படுத்தப்பட வேண்டும். இந்த விலையானது ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குரிய பணத்தின் வடிவிலோ, கட்புலனாகும் பொருட்களின் வடிவிலோ அல்லது ஒரு சொத்தின் நுகர் உரிமை வடிவிலோ காணப்படலாம்.
- முடிவுப் பொருள் ஒப்பந்தத்தின் விலை அந்தப் பொருள் வழங்கப்பட்டவுடனே அதே இடத்தில் வைத்து செலுத்தப்படும்.
- ஆக்கபூர்வமான உடமையின் ஊடாக குறிப்பிட்ட விடயத்தின் விநியோகம் இடம்பெறலாம். குறிப்பிட்ட அந்த விடயத்தை பொருத்த வகையில் வாடிக்கையாளரின் பொறுப்புடைமை இறுதியில் வருகின்ற அதேவேளை, வங்கியின் பொறுப்புடைமை உச்ச கொள்வனவாளருக்கு அதனை விற்பனை செய்யும் வரை காணப்படும்.
- பொருட்கள் கப்பலில் ஏற்றப்படுவதற்கு அடுத்தபடியாக ஏற்றப்பட்ட அந்த பொருட்கள் பற்றிய ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதன் பின்னர், கப்பலேற்றலுக்கு முந்திய திஜாரா நிதிச் சேவையிலிருந்து கப்பலேற்றலுக்கு பிந்திய திஜாரா நிதிச் சேவைக்கு இந்த நிதி மாற்றப்படும்.
- பொருட்கள் கப்பலில் ஏற்றப்படுவதற்கு அடுத்தபடியாக அவை ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான பற்றுச்சீட்டு கிடைக்கப் பெற்றதும் கப்பலேற்றலுக்கு பிந்திய திஜாரா நிதிச் சேவையிலிருந்து திஜாரா நிதிச் சேவைக்கு (வங்கியின் இடர் கோட்டுக்கு) இந்த நிதி மாற்றப்படும்.
- கப்பலேற்றலுக்கு முந்திய நிதிச் சேவையிலிருந்து கப்பலேற்றலுக்கு பிந்திய நிதிச் சேவையாக மாற்றப்படுவதானது கப்பலேற்றலுக்கு முந்திய நிதிச் சேவையை பயன்படுத்திக் கொள்ள வாடிக்கையாளருக்கு துணைபுரிகிறது.
- திஜாரா நிதிச் சேவையிலிருந்து வங்கி இடர் கோட்டு நிதிச் சேவையாக மாற்றப்படுவதானது திஜாரா வரையறையில் தளர்வை ஏற்படுத்திக் கொள்ள வாடிக்கையாளருக்கு துணைபுரிகிறது.

**தேவையான ஆவணங்கள்**

- முடிவுப் பொருள் வசதியளித்தல் உடன்படிக்கை
  - எழுத்துமூல வழங்கல்
  - பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான குறிப்பு
- முடிவுப் பொருட்கள் முகவர் உடன்படிக்கை
  - முகவர் கட்டணம்
  - ஊக்குவிப்பு கட்டணம்
- பிணையாளி / வேறு ஏதாவது பிணைகள்

## இஸ்திஸ்னா நிதிச் சேவை

### உற்பத்தி விபரம்

இஸ்திஸ்னா என்பது தயாரிக்கப்படும் அல்லது உருவாக்கப்படும் குறிப்பிடத்தக்க பொருட்களின் விற்பனை மீதான ஓர் ஒப்பந்தமாகும். இதில் தயாரிப்பாளர் அல்லது ஆக்குனர் தமது பொருட்களை உற்பத்தியின் நிறைவில் வாடிக்கையாளருக்கு வழங்க கடமைப்பட்டுள்ளார்.

### நிதிச் சேவை முறைகள்

குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் விற்பனை மற்றும் தொழிற்துறையின் நிதித் தேவைகளுக்கு வசதியளிப்பதற்கு ஏற்ற வகையில் இஸ்திஸ்னாவை மிகவும் இலகுவாக பயன்படுத்தி விட முடியாது.

- **நடப்பு மூலதனம்** – தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான நடப்பு மூலதனத்திற்கு இஸ்திஸ்னா ஊடாக வசதியளிக்கலாம்.
- **வியாபார நிதி** – தயாரிப்புத் துறையின் நன்மைக்காக ஏற்றுமதிகளுக்கு நிதியளிக்க இஸ்திஸ்னாவை பயன்படுத்தலாம். மேலும், ஏற்றுமதி சலுகை விடுப்புக் கால பில் கொள்வனவிற்குரிய ஓர் இஸ்லாமிய மாற்று வழியாகவும் இதனை பயன்படுத்தலாம்.
- **நீண்டகால நிதிச் சேவை-** கட்டட நிர்மாணத்திற்கு (தொழிற்சாலை) தேவைப்படும் மத்தியகாலம் முதல் நீண்டகாலம் வரையான தேவைகளையும் இஸ்திஸ்னா ஊடாக நிறைவேற்றிக் கொள்ளலாம். நிர்மானித்து, செயற்படுத்தி பரிமாற்றும் ஏற்பாடுகளுக்கும் இஸ்திஸ்னா நிதிச் சேவை ஊடாக வசதியளிக்கலாம்.
- **நுகர்வோர் வீடமைப்பு நிதி** – அடுக்குமாடிகளை நிர்மாணிப்பதற்காகவும் இதன் மூலம் நிதி வசதியை செய்து கொடுக்கலாம்.

### உற்பத்தியின் சிறப்பியல்புகள்

- தொழிலாளரை உள்வாங்கிய ஒரு தயாரிப்பு அல்லது நிர்மான செயன்முறை மூலமாக அவற்றின் இயல்பு நிலையிலிருந்து மாற்றம்பெறக்கூடிய மூலப்பொருட்களுக்காக மாத்திரம் ஒரு இஸ்திஸ்னா ஒப்பந்தம் அனுமதிக்கப்படுகின்றது.
- குறிப்பிட்ட பொருளின் வகை, மாதிரி, தரம், அளவு என்பன பற்றிய முழுமையான விபரம் தயாரிப்பாளருக்கு வழங்கப்பட்டு அந்த நிர்மாணம் அல்லது தயாரிப்புக்காக நிதியும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தால், அந்த சொத்தை தயாரிப்பதற்கு தயாரிப்பாளர் கடமைப்படுகின்றார். அவரால் ஒருதலைப்பட்சமாக அந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்த முடியாது.
- தயாரிப்பு அல்லது நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டதும் இஸ்திஸ்னா உடன்படிக்கையின் கீழ் வங்கி (முஸ்தஸ்னாய்) அதன் கடமையை நிறைவேற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளது.
- ஒப்பந்தத்தின் நிறைவில் ஒரு இஸ்திஸ்னா ஒப்பந்தத்திற்காக விலையை தெரியப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.
- ஒப்பந்தத்தின் நிறைவில் இஸ்திஸ்னா ஒப்பந்தத்திற்கான விலை தெரியப்படுத்தப்பட வேண்டும். இந்த விலையானது ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குரிய பணத்தின் வடிவிலோ, கட்புலனாகும் பொருட்களின் வடிவிலோ அல்லது ஒரு சொத்தின் நுகர் உரிமை வடிவிலோ காணப்படலாம்.
- ஒரு இஸ்திஸ்னா ஒப்பந்தத்திற்கான விலை முற்கூட்டி அல்லது பிந்தி அல்லது ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பல தவணைகளில் செலுத்தப்படலாம். வேலையின் பூர்த்திக் கட்டத்துடன் விலைக்கான கொடுப்பனவை கொள்வனவு செய்பவர் தொடர்புபடுத்துவார்.
- இஸ்திஸ்னா கொடுக்கல்வாங்கல்களின் விலை விநியோகத் திகதியில் உள்ள வித்தியாசங்களுக்கு அமைய வேறுபடலாம். விநியோகிப்பதற்கு தாமதிக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட

விலையிலிருந்து ஒவ்வொரு நாளைக்கும் ஒரு தொகை குறைக்கப்படும் என்று இரு தரப்புக்கும் இடையில் இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தால், அது அனுமதிக்கக்கூடியதாகும்.

- எதிர்பாராத அசம்பாவிதங்கள் சம்பவிக்கும் போது இஸ்திஸ்னா ஒப்பந்தத்தின் ஒப்பந்த விலையை உயர்த்துவதற்கு அல்லது குறைப்பதற்கு அனுமதியுண்டு.
- குறிப்பிட்ட விடயத்தை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக தயாரிப்பாளரின் உரிமையில் உள்ள பொருட்களின் உரிமையாளராக கடைசியாக கொள்வனவு செய்பவரை கருதிவிட முடியாது.
- பொருட்களின் விநியோக நேரம் இஸ்திஸ்னா உடன்படிக்கையில் இணங்கிக் கொள்ள வேண்டுமென்று அவசியமல்ல. எனினும், இரு தரப்புக்கும் இடையில் ஒரு நேரம் தொடர்பில் இணக்கம் காணப்படலாம்.
- ஆக்கபூர்வமான உடமையின் ஊடாக குறிப்பிட்ட விடயத்தின் விநியோகம் இடம்பெறலாம். குறிப்பிட்ட அந்த விடயத்தை பொருத்த வகையில் வாடிக்கையாளரின் பொறுப்புடைமை இறுதியில் வருகின்ற அதேவேளை, வங்கியின் பொறுப்புடைமை உச்ச கொள்வனவாளருக்கு அதனை விற்பனை செய்யும் வரை காணப்படும்.
- தயாரிக்கப்பட்ட சொத்தானது விநியோக நேரத்தில் முன்பின் முரண்படுவதைப் போன்று காணப்படுமானால், இது தவறிழைத்த ஒரு சந்தர்ப்பமாக கருதப்படும்.
- குறிப்பிட்ட பொருளின் ஏதாவது குறைபாடுகளுக்கு அல்லது நிர்வகிப்புக்கு தயாரிப்பாளர் கடமைப்படும் ஒரு காலப் பகுதி குறித்து இரு தரப்புக்களும் இணக்கப்பாட்டுக்கு வரலாம்.

## தேவையான ஆவணங்கள்

- முடிவுப் பொருள் வசதியளித்தல் உடன்படிக்கை
  - எழுத்துமூல வழங்கல்
  - பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான குறிப்பு
- முடிவுப் பொருட்கள் முகவர் உடன்படிக்கை
  - முகவர் கட்டணம்
  - ஊக்குவிப்பு கட்டணம்
- பிணையாளி / வேறு ஏதாவது பிணைகள்

## அமானா சொத்து நிதி மற்றும் நடப்பு மூலதன நிதிச் சேவை

### உற்பத்தி விபரம்

குறைவடைந்து வரும் முஷாரக்கா கொள்கையின் கீழ் இந்த அமானா சொத்து நிதிச் சேவையும், நடப்பு மூலதன நிதிச் சேவையும் வழங்கப்படுகின்றது.

குறைவடைந்து வரும் முஷாரக்கா கொள்கையின் கீழ், வங்கியும், வாடிக்கையாளரும் கூட்டாக இணைந்து குறிப்பிட்ட சொத்தை (அதாவது சொத்து, இயந்திரங்கள் போன்ற) கொள்வனவு செய்வார்கள். அதன் பின்னர், அதற்கான பங்கை வங்கி வாடிக்கையாளருக்கு குத்தகையாக வழங்கும். இந்தப் பங்கிற்கான பெறுமதி முற்றாக தனக்கு மாற்றப்படும் வரை வங்கியிடமிருந்து சரிநிகர் பங்கை படிப்படியாக கொள்வனவு செய்வதற்கு வாடிக்கையாளர் உறுதியளிப்பார்.

அமானா நடப்பு மூலதன நிதிச் சேவையின் கீழ், அமானா வங்கி வாடிக்கையாளரின் மூலதனத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அவருக்கு நிதிசார் அடிப்படையில் உதவுவதற்காக குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தின் பொருத்தமான சொத்தின் மீது முதலீடு செய்யும்.

அங்கு 12 மாதங்கள் கட்டாய கால கட்டமாக இருக்கும். இதன்போது வாடிக்கையாளர்கள் மூலதன அலகுகளை கொள்வனவு செய்ய முடியாது. மாதாந்தம் ஒரு வாடகை தொகையை மாத்திரமே செலுத்த வேண்டும். மேலும், அமானா வங்கிக்கும், வாடிக்கையாளருக்கும் இடையில் குறிப்பிட்ட சொத்தின் உரிமை தொடர்ந்தும் மாற்றப்படாமல் இருக்கும்.

### நிதிச் சேவை முறைகள்

1. **குறைந்து செல்லும் முஷாரக்கா (கூட்டுத் தொழில்முயற்சி)**
   இது பொதுவாக குறைவடைந்து வரும் முஷாரக்கா கொடுக்கல்வாங்கலாகும்.

2. **நடப்பு மூலதனம் குறைந்துசெல்லும் முஷாரக்கா**

   வாடிக்கையாளர் ஒரு சிறந்த காலப் பகுதியை பெற்றுக் கொள்ளக் கூடிய, ஒரு பொதுவான, குறைவடைந்து செல்லும் முஷாரக்கா கொடுக்கல்வாங்கலாகும்.

3. **குறைவடைந்து செல்லும் முஷாரக்கா வாகனம் / இயந்திரம்**

   ஒரு வாகனத்தை அல்லது இயந்திரத்தை கூட்டாக இணைந்து கொள்வனவு செய்யும் போது இந்த நிதிச் சேவை முறை பயனுள்ளதாக அமையும்.

### உற்பத்தியின் சிறப்பியல்புகள்

- வாடிக்கையாளரின் (நிறுவனத்தின்) பெயரில் குறிப்பிட்ட சொத்து பதிவு செய்யப்படும் அதேவேளை, அந்த சொத்துக்கு நிகரான அடைமானம் வங்கியின் பெயரில் உருவாக்கப்படும்.
- சொத்தின் உரிமையை பாதுகாப்பதற்காக வங்கி அந்த சொத்தை அடைமானம் வைக்கிறது.
- குறைவடைந்து செல்லும் முஷாரக்காவை கற்புலனாகும் சொத்துக்களில் மாத்திரமே மேற்கொள்ள முடியும். ஒட்டுமொத்த வர்த்தகத்திலும் மேற்கொள்ள முடியாது.
- முதலீட்டுப் பங்குகளின் பங்கீடு ஒப்பந்தத்தில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

## தேவையான ஆவணங்கள்

- குறைவடைந்து செல்லும் முஷாரக்கா விண்ணப்பப் படிவம்
- பிரதான முஷாரக்க உடன்படிக்கை
- வழங்கல் மற்றும் ஏற்புக் கடிதம்
- வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படும் துணைக் குறிப்புக்கள்

## முஷாரக்கா நிதிச் சேவை

### உற்பத்தி விபரம்

ஷரீஆக் கொள்கைகளுக்கு அமைய ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கும் பொதுவான நோக்கத்திற்காக வேறுபட்ட பங்களிப்புக்கள், பணிகள். அல்லது கடப்பாட்டுகளுடன் கூட்டிணைந்து தொழிற்படும் செயற்பாடும் ஒரு கூட்டுமுயற்சியே முஷாரக்கா ஆகும்.

பங்களிப்பு மூலதனத்துடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து தமக்கிடையில் முஷாரக்கா ஒப்பந்தத்தை செய்து கொள்ளலாம். ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் போது இந்த பங்களிப்பாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகைக்கு அமைய அவர்களுக்கு மத்தியில் இலாபம் பகிர்ந்தளிக்கப்படும்.

### நிதிச் சேவை முறைகள்

1. **உள்ளுர் முஷாரக்கா**
   அமானா வங்கியினால் தனது முழு வியாபாரத்திற்கும் நிதியுதவி வழங்கப்பட வேண்டும் என்று ஒரு வாடிக்கையாளர் விரும்பினால், உள்ளுர் முஷாரக்கா நிதிச் சேவையை பயன்படுத்தலாம்.

2. **கொடுக்கல்வாங்கல் முஷாரக்கா**
   ஒரு கம்பனியின் குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கலுக்காக மாத்திரமே கொடுக்கல்வாங்கல் முஷாரக்கா பயன்படுத்தப்படும்.

### உற்பத்தியின் சிறப்பியல்புகள்

- முஷாரக்கா கொடுக்கல்வாங்கலுக்காக அமானா வங்கியும், வாடிக்கையாளரும் பங்களிப்புச் செய்வார்கள்.
- ஒப்பந்தம் செய்துகொள்ளும் நேரத்தில் இலாபப் பகிர்வு வீதம் பற்றி இணக்கம் காணப்பட வேண்டும்.
- வங்கியானது தூங்கும் பங்காளியாக செயற்படும் அதேவேளை, வாடிக்கையாளர் இந்த கூட்டுப்பணியில் பிரதானமாக முன்னின்று தொழிற்படுவார். வியாபார நடவடிக்கைகளை வங்கியின் ஒரு பிரதிநிதி அவதானித்துக் கொண்டிருப்பார்.
- மூலதனப் பகிர்வு விகிதத்திற்கு அமைய வியாபாரத்தில் ஏற்படும் ஏதாவது உண்மையான இழப்புக்கள் வங்கியினாலும், வாடிக்கையாளரினாலும் பொறுப்பேற்றுக் கொள்ளப்படும்.
- வாடிக்கையாளரின் கவனக்குறைவு காரணமாக ஏதாவது நட்டங்கள் ஏற்பட்டால், அந்த ஒட்டுமொத்த நட்டத்தையும் வாடிக்கையாளர் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.
- ஒவ்வொரு பங்காளிக்குமான இலாபப் பகிர்வானது குறிப்பிட்ட வியாபாரம் அல்லது செயற்திட்டத்தின் மூலம் ஈட்டப்பட்ட உண்மையான இலாபத்தின் பகிர்வு அடிப்படையிலேயே ஒழிய முதலீடு செய்யப்பட்ட மூலதனத் தொகைக்கு அமைய நிர்ணயிக்கப்படமாட்டாது.
- எந்தவொரு பங்காளியும் தனது அடுத்த பங்காளிக்கு முறையாக அறிவித்ததன் பின்னர் எந்த நேரத்திலும் இந்த முஷாரக்கா கூட்டுமுயற்சியை முடிவுறுத்திக் கொள்ள உரிமை உண்டு. அவ்வாறு செய்யும் பட்சத்தில் அந்த முஷாரக்கா முடிவுக்கு வரும்.
- இந்த விடயத்தில் முஷாரக்காவிற்கு உரிய சொத்துக்கள் பணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தால், அவை அனைத்தும் பங்காளிகளுக்கு இடையில் விகிதப்படி பகிர்ந்தளிக்கப்படும். ஆனால், சொத்துக்கள் பணம் சார்ந்ததாக இல்லாத பட்சத்தில், ஒன்றில் அந்த சொத்துக்களை பணமாக்கிக் கொள்ளும் வரை அல்லது அவற்றை தமக்கு இடையில் பகிர்ந்து கொள்வதற்கு பங்காளிகள் இணங்கிக் கொள்ளலாம்.

### தேவையான ஆவணங்கள்

- முஷாரக்கா விண்ணப்பப் படிவம்
- பிரதான முஷாரக்க உடன்படிக்கை
- வழங்கல் மற்றும் ஏற்புக் கடிதம்
- பொதுவான பாதுகாப்பு ஆவணங்கள்

## வகலா நிதிச்சேவை

### உற்பத்தி விபரம்

வகலா நிதிச் சேவையில் வாடிக்கையாளர் ஒரு பிரதிபலனை எதிர்பார்த்து வங்கியின் நிதியை முகாமைப்படுத்துவதில் ஒரு முகவராக தொழிற்படுவார்.

### உற்பத்தியின் சிறப்பியல்புகள்

- வாடிக்கையாளர் வழங்கும் சேவைக்காக ஒரு வகலா கட்டணம் வழங்கப்படும்.
- போட்டிமிக்க இலாப விகிதம் வங்கிக்கு வழங்கப்படும்.

### தேவையான ஆவணங்கள்

- விண்ணப்பப் படிவம்
- கோரிக்கை கடிதம்
- பிரதான வகலா உடன்படிக்கை
- வழங்கல் மற்றும் ஏற்புக் கடிதம்
- பொதுவான துணைக் குறிப்புக்கள்

## குத்தகை

### உற்பத்தி விபரம்

வாடிக்கையாளர் விரும்பும் (வாகனம், இயந்திரம், உபகரணம் போன்ற) சொத்தை வங்கி கொள்வனவு செய்து அதை வாடிக்கையாளருக்கு வாடகைக்கு வழங்கும் ஒரு கொடுக்கல்வாங்கலாகும். இங்கு குறிப்பிட்ட வாடகை காலத்திற்குரிய தொகை செலுத்தி முடிக்கப்பட்டதும் அந்த சொத்து வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் என்று வங்கி உறுதியளிக்கும்.

### உற்பத்தி சிறப்பியல்புகள்

- இஜாரா ஷரீஆ கொள்கையின் கீழ் குத்தகை செயற்பாடு இடம்பெறும்.
- சொத்தின் பெறுமதியில் 100 சதவீதம் வரை நிதிவசதி வழங்கப்படும்.
- குறிப்பிட்ட சொத்தை பாவிக்க ஆரம்பிக்கும் போது மாத்திரமே வாடகைக் கொடுப்பனவுகள் செலுத்த வேண்டியிருக்கும்.
- குறிப்பிட்ட சொத்து தொழிற்படும் நிலையில் இருந்தால் மட்டுமே வாடகைக் கொடுப்பனவு அறவிடப்படும்.

### தேவையான ஆவணங்கள்

- தே.அ.அ / கடவுச்சீட்டு / வாகன அனுமதிப்பத்திரம்
- விண்ணப்பப்படிவம்
- குத்தகை உடன்படிக்கை
- தக்காபுல் காப்புறுதி பதிலீடு
- வியாரபார நிறுவனத்திற்கான வியாபார பதிவுச் சான்றிதழ்
- கடைசி 06 மாத கால வங்கிக் கூற்றுக்கள் (அவசியம் எனின்)
- கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களும், கடந்த 3 வருடங்களுக்கான வரி பிரதிபலன்களும் (அவசியம் எனின்)
- வாங்குபொருள் விபரப்பட்டியல் / விநியோகஸ்தரிடம் அல்லது முகவரிடம் இருந்து குறிப்பிட்ட சொத்துக்கான விலை / விபரப்பட்டியல் மதிப்பீட்டு அறிக்கை
- தற்போதைய சம்பளம் அல்லது ஏனைய உழைப்புக்கள் பற்றிய ஆதாரம்
- வழங்கல் மற்றும் ஏற்புக் கடிதம்

## பின்னூட்டல் மற்றும் முறைப்பாடுகள்

வங்கியின் வாடிக்கையாளர்கள் தமது பெறுமதிமிக்க பின்னூட்டல்களை வழங்குவதற்கு வரவேற்கப்படுகின்றனர். இதற்காக 'Tell us about your service experience' – (உங்கள் சேவை அனுபவத்தை எங்களுக்குச் சொல்லுங்கள்) என்ற தலைப்பில் இருக்கும் படிவத்தை அமானா வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் இருந்து பெற்று அல்லது இதே படிவத்தை www.amanabank.lk என்ற இணையதளத்திலிருந்து பதவிறக்கம் செய்து உங்கள் பின்னூட்டல்களை வழங்கலாம்.

மேலும் எமது உற்பத்தி அல்லது சேவைகள் தொடர்பான முறைப்பாடுகளை கீழ்வரும் வழிமுறைகளில் நீங்கள் முறையிடலாம்.

1. சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளரை தொடர்பு கொள்வதன் மூலம்
2. feedback@amana.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்களது முறைப்பாட்டை மின்னஞ்சல் செய்வதன் மூலம்
3. எமது அவசர அழைப்பு தொலைபேசி இலக்கமான 011 7 756756 ஐ தொடர்பு கொள்வதன் மூலம்
4. www.amanabank.lk என்ற எமது இணையதளத்தில் எம்மை தொடர்பு கொள்ளுங்கள் என்ற பக்கத்தில் ஒரு குறுந்தகவலை அனுப்புவதன் மூலம்

முறைப்பாடு கிடைக்கப்பெற்றதும் நாம் அது கிடைக்கப் பெற்றது என்பதையும், உடனடியாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உங்களுக்கு அறிவிப்போம்.